# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது

சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001

தொலை பேசி : 044-25358718, 9444058718 மின்அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:101:2022 02.01.2022

அன்பார்ந்த தோழர்களே !

## இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்

மாற்றமே உலக நியதி, மாறாதது மாற்றம் மட்டுமே. இந்தப் பேரண்டத்திலுள்ள அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கின்றன. மாற்றங்களை ஏற்பதில் மனித மனம் பல இன்னல்களைச் சந்திக்கிறது. எந்த மாற்றத்தையும் எளிதில் மனம் ஏற்பதில்லை. மாற்றத்தை ஏற்பவர்களும், மாற்றங்களுக்கு காரணமானவர்களும், மாற்றங்களுக்கு தகுந்தாற்போல தன்னை மாற்றிக்கொள்பவர்களும் வாழ்வில் வெற்றி பெறுகிறார்கள். காய்ந்த சருகாக 2021 விழுந்து, 2022ஆம் ஆண்டு துளிர்விட்டுள்ள இந்த வேளையில், உங்கள் அனைவருக்கும், குடும்பத்தாருக்கும் சங்கத்தின் சார்பில் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா பெருந்தொற்றின் காரணமாக உலகப் பொருளாதாரம் மிகப்பொரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. உலகம் முழுவதும் இத்தொற்றின் காரணமாக பல்லாயிரம் மக்கள் தங்கள் இன்னுயிரை இழந்துள்ளனர். உழைக்கும் மக்களில் பலர் தங்கள் வேலைவாய்ப்பையும், வாழ்வாதரத்தையும் இழந்துள்ளனர். அதே சமயம், பணக்காரர்களின் செல்வம் அதிகரித்துள்ளது. இருப்பவர்களுக்கும், இல்லாதவர்களுக்குமான இடைவெளி அதிகரித்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில், இந்திய அரசு பெருந்தொற்றை தடுப்பதற்கான அல்லது குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதைவிட, தனது பொருளாதார கொள்கையான தனியார்மயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் விற்று வருகிறது. தற்போது, 6 லட்சம் கோடி அளவுக்கு, அரசின் சொத்துக்களை தனியாருக்கு விற்கும், குத்தகைக்குவிடும் நடவடிக்கையை துவக்கியுள்ளது. சாலைகள், ரயில்வே சொத்துக்கள், மின் உற்பத்தி, மின் வினியோகம், தொலைதொடர்புத்துறை, கிடங்குகள், சுரங்கங்கள், விமானத்துறை, கப்பல் தளங்கள், அரங்கங்கள் ஆகியவற்றை தனியாருக்கு நீண்ட கால குத்தகைக்கு விடும் நடவடிக்கை துவக்கப்பட்டுள்ளது. கடந்த தலைமுறையினர் சேர்த்துவைத்த சொத்துக்களை அடிமாட்டு விலைக்கு விற்கும் நடவடிக்கை துவங்கியுள்ளது. பலன் பெற்ற நிறுவனங்கள், அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் பாண்டுகள் (Electoral Bonds) மூலம் அதிக அளவில் தேர்தல் நிதி வழங்குவது சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஒன்றிய அரசின் கொள்கைகள் கார்ப்பொரேட்டுகளுக்கு ஆதரவாகவும் சாதாரண மக்களுக்கு எதிராகவும் இருப்பது அனைவரும் அறிந்ததே. இந்த நிலையில் விவசாய சட்டங்களுக்கு எதிராக, ஓர் ஆண்டுக்கும் மேலாக போராடிய விவசாயிகள் பெற்றுள்ள வெற்றி ஒட்டுமொத்த ஜனநாயக சக்திகளுக்கும், தொழிலாளர்களுக்குமான வெற்றியாகும்.

வங்கித்துறையில், இரண்டு பொதுத்துறை வங்கிகளைத் தனியாருக்கு விற்கவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தொடர் போராட்டங்களின் காரணமாக, இதுவரை, அரசு வங்கிகளை விற்க இயலவில்லை. கடந்த டிசம்பர் 16,17

வேலைநிறுத்தமும், அந்த வேலைநிறுத்தத்தில் உணர்வுப்பூர்வமாக கலந்துகொண்ட இளைய தோழர்களின் பங்களிப்பும் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. தனியார்மயத்திற்கான முயற்சி தொடருமானால், காலவரையறையற்ற வேலைநிறுத்தத்திற்கும் ஊழியர்கள் தயாராகவுள்ளனர்.

ஆந்திரா வங்கியும், கார்ப்பொரேஷன் வங்கியும் யூனியன் வங்கியுடன் இணைந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடையும் நிலையில், ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் பணிவரன்முறைகள் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. மூன்று வங்கிகளிலும் இருந்த சிறந்த அம்சங்கள் புதிய கொள்கைகளில் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது கிளைகள் இணைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. வங்கி இணைப்பின்போது இருந்த கிளைகள் எண்ணிக்கை அதே அளவில் தொடரும் என்றும், தற்சமயம் அருகிலுள்ள கிளைகள் இணைக்கப்பட்டு, பின்னர் புதிய பகுதிகளில் புதிய கிளைகள் துவங்கப்படும் என்றும் நிர்வாகம் தெரிவித்துள்ளது. வங்கியில் படிப்படியாக கலாச்சார இணைப்பு ஏற்பட்டுவருகிறது.

ஊழியர்களைப் பொருத்த அளவில், அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கத்தின் முயற்சியின் காரணமாக பழைய பதவி உயர்வு கொள்கை அப்படியே தொடரவும், சில மாற்றங்களுடன் இடமாற்றல் கொள்கை, பணிஉயர்வு (Higher Assignement) கொள்கை தொடரவும் முடிவுஎடுக்கப்பட்டு, அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஆந்திரா வங்கி, கார்ப்பொரேஷன் வங்கிகளில் பகுதிநேர ஊழியர்களாக இருந்த ஊழியர்கள் தற்சமயம் முழுநேர ஊழியர்களாக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் அவர்களது வாழ்க்கைத்தரம் வெகுவாக உயர்ந்துள்ளது. மூன்று வங்கிகளிலும் தற்காலிகப்பணியாளர்கள் மாறுபட்ட பணிநிலைகளில் பணியாற்றிவந்தனர். அனைத்து தற்காலிக ஊழியர்களுக்கும் ஒரே மாதிரியான ஊதியம் வழங்கவும், அவர்களுக்கு பணிநிரந்தரம் வழங்கவும் அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கம் முயற்சி மேற்கொண்டுள்ளது.

வங்கிகள் இணைப்பிற்குப்பின், சங்கங்களின் இணைப்பு முயற்சி துவங்கியது. தமிழகத்தில் கடந்த 14.08.2021 அன்று மூன்று சங்கங்களும் இணைந்து வலிமையான யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு) உதயமானது. அதனைத் தொடர்ந்து சங்கத்தின் முதற் செயற்குழுக்கூட்டம் மாமல்லபுரத்தில் நடைபெற்றது. அந்தக்கூட்டத்தில் அகில இந்தியப் பொதுச்செயலாளர் தோழர்.**N.சங்கர்** கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

நமது சங்கத்தின் முதல் இணைப்பில், சென்னை, கோவை, மதுரை பகுதிகளில் இயங்கிவந்த மூன்று சங்கங்கள் இணைத்து 22.04.1973 அன்று யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு) உதயமானது. இரண்டாவது இணைப்பில் ஆந்திரா வங்கி ஊழியர் சங்கம் மெட்ராஸ், கார்ப்பொரேஷன் வங்கி ஊழியர் சங்கத்தின் தமிழக உறுப்பினர்கள் இணைந்து, வலிமையான, 98% ஊழியர்களை உள்ளடக்கிய, யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு) 14.08.2021 அன்று உதயமானது.

22.04.1973ல் துவக்கப்பட்ட நமது சங்கம் வரும் 22.04.2022 அன்று தனது பொன்விழா ஆண்டில் காலெடுத்துவைக்கவுள்ளது. 22.04.2022 முதல் 21.04.2023 வரை சங்கத்தின் பொன்விழா நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவுள்ளது.

வங்கிகள் தனியார்மயத்திற்க எதிராக, இந்திய விவசாயிகள் போல ஒரு நீண்ட நெடிய போராட்டத்திற்கு தயாராவோம். மீண்டும் ஒருமுறை இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

அ.சிதம்பரம்

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**